Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ் ISSN: 3049-0723 (Online)
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal

Volume 1, No. 05 | February 2025

# The Hijab's Silent Revolution: How Modesty Can Empower Women

**T.M. Shahidha Banu[1], Dr. T.K.Pushparaj2**

1. Part-time, PhD Research Scholar, Department of Tamil Studies, Kandasamy Kantar College, Paramathi Vellore. Paramathi Vellore. – 638182
2. Assistant Professor, Department of Tamil Studies, Kandasamy Kantar College, Paramathi Vellore. Paramathi Vellore. – 638182

## ABSTRACT

Just as eyelids are vital for protecting the eye, the hijab holds a similar significance for women. God created eyelids not to imprison the eyes or diminish their beauty, but to safeguard them. Similarly, the hijab, mandated by God for women, is not intended to subjugate or confine them to their homes. Instead, it serves as a protective barrier, safeguarding their dignity and moral character. The word "hijab" itself translates to "covering" or "screening." In the context of Islamic Sharia, it refers to the garment that conceals the parts of a woman's body that are obligatory to cover. In our country, this covering is referred to by various names, such as burqa, dupatta, and other similar terms. Interestingly, in Arabic, "hijab" is also the term used for eyelashes. Just as eyelashes protect the eye, the hijab is intended to safeguard a woman's chastity and honor. The hijab is far more than just a piece of clothing. It is a symbol of morality, an expression of dignity, and a shield of protection. It represents a conscious choice to prioritize inner virtues over outward appearances and to be judged on merit and intellect rather than physical allure.

## ARTICLE INFO

Received : 20 Jan 2025
Revised : 30 Jan 2025
Accepted : 01 Feb 2025

## KEYWORDS

Hijab, Women and Hijab, Women Rights

# பெண்ணுரிமை பேணும் ஹிஜாப்

**T.M.சாகிதா பானு,**

பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, கந்தசாமி கண்டர் கல்லூரி, பரமத்தி வேலூர். பரமத்தி வேலூர். – 638182

**முனைவர் T.K.புஷ்பராஜ்**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, கந்தசாமி கண்டர் கல்லூரி, பரமத்தி வேலூர். பரமத்தி வேலூர். – 638182

**முன்னுரை:**

கண்ணுக்கு இமை எவ்வளவு முக்கியமோ, அதேபோல பெண்ணுக்கு ஹிஜாப் முக்கியமானது. இறைவன் இமைகளைப் படைத்திருப்பது கண்களைச் சிறைப்படுத்தவோ அல்லது அவற்றின் அழகைக் குறைக்கவோ அல்ல; மாறாக, கண்களைப் பாதுகாப்பதற்காகத்தான். அதேபோல, பெண்களுக்கு ஹிஜாபை இறைவன் கடமையாக்கியிருப்பதும் அவர்களை அடிமைப்படுத்தவோ, வீட்டுக்குள்ளேயே சிறைப்படுத்தவோ அல்ல; அது அவர்களுடைய கண்ணியத்தையும், ஒழுக்கத்தையும் காப்பதற்காகவே."ஹிஜாப்" என்ற சொல்லுக்குத் திரையிடுதல் அல்லது மறைத்தல் என்று பொருள். அதாவது, இஸ்லாமிய ஷரீஆத்தின் படி, ஒரு பெண்ணின் உடலில் கட்டாயமாக மறைக்கப்பட வேண்டிய பகுதிகளை மறைக்கும் ஆடைக்கு ஹிஜாப் என்று கூறப்படுகிறது. நம் நாட்டில் இதனை பர்தா, புர்கா, துப்பட்டி போன்ற பல்வேறு பெயர்களில் குறிப்பிடுகின்றனர். ஹிஜாப் என்பது அரபி மொழியில் கண் இமைக்கு பயன்படுத்தப்படும் சொல்லாகும். கண் இமையானது கண்ணைப் பாதுகாப்பது போல், ஹிஜாப் என்னும் ஆடை கற்பையும், மானத்தையும் பாதுகாக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம். ஹிஜாப் என்பது வெறும் ஆடையல்ல; அது ஒழுக்கத்தின் அடையாளம், கண்ணியத்தின் வெளிப்பாடு, மற்றும் பாதுகாப்பின் கவசம்.

**இஸ்லாமிய ஷரீஅத்தில் ஹிஜாபின் நிலை:**

ஹிஜாப் என்பது வெறுமனே நான் ஒரு முஸ்லிம் பெண் என்பதற்கான அடையாளச் சின்னம் மட்டுமல்ல; மாறாக, அது இஸ்லாமிய மார்க்கத்தின் ஒருங்கிணைந்த, இன்றியமையாத ஒரு பகுதி. இது அல்லாஹ்வின் கட்டளை; ஒவ்வொரு முஸ்லிம் பெண்ணும் இதைக் கடைப்பிடித்தே தீர வேண்டும் என்பது கட்டாயக் கடமை. ஹிஜாப் என்பது விருப்பமிருந்தால் அணியலாம், இல்லையென்றால் விட்டுவிடலாம் என்ற எண்ணத்தில் அணியும் அலங்காரப் பொருளல்ல. மாறாக, இது இறைவனின் ஆணை என்பதை முதலில் நாம் ஆழமாக மனதில் பதிய வைக்க வேண்டும்.

அல்லாஹ்வின் கட்டளையான ஹிஜாபை அலட்சியம் செய்யும்போது, ஒரு பெண் அல்லாஹ்வின் உத்தரவை மட்டுமல்ல, ஒட்டுமொத்த இறைச் சட்டத்தையுமே அலட்சியம் செய்கின்றார். இது இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு எதிரான செயல். ஹிஜாபை முறையாக அணியாத அல்லது அதை வேண்டுமென்றே புறக்கணிக்கும் ஒரு பெண், இஸ்லாமிய வட்டத்தை விட்டே வெளியேறுகின்ற அபாயகரமான நிலைக்குத் தள்ளப்படுகிறார். எனவே, ஹிஜாபின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதைச் சரியான முறையில் பின்பற்றுவது ஒவ்வொரு முஸ்லிம் பெண்ணின் கடமையாகும். இதன் மூலம் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து, இஸ்லாமிய விழுமியங்களைப் பாதுகாப்பதோடு, இறைவனின் அருளையும் பெற முடியும்.

**இறைவசனம்:**

திருக்குர்ஆனின் 24:31 வசனத்தில் இறைவன், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலம் இறைநம்பிக்கை கொண்ட பெண்களுக்கு ஒரு கட்டளையைப் பிறப்பிக்கிறான். அந்த வசனத்தின்படி, இறைநம்பிக்கை கொண்ட பெண்கள் தங்கள் பார்வைகளை அடக்க வேண்டும், வெட்கஸ்தலங்களைப் பாதுகாக்க வேண்டும். தவிர்க்க இயலாமல் வெளியில் தெரிய நேரிடும் பாகங்களைத் தவிர, மற்ற அழகை வெளிக்காட்டக்கூடாது. மேலும், மார்புகளை மறைக்கும் விதமாக முக்காடு அணிந்து கொள்ள வேண்டும்.

இந்த வசனத்தின் நேரடியான பொருள், இறைநம்பிக்கை கொண்ட ஒவ்வொரு பெண்ணும் கண்டிப்பாக ஹிஜாப் அணிய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஹிஜாப் என்பது ஒரு பெண்ணின் அடக்கத்தையும், ஒழுக்கத்தையும் வெளிப்படுத்தும் ஆடை.

மேலும், திருக்குர்ஆனின் 33:59 வசனத்தில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது புதல்விகளுக்கும், நம்பிக்கையாளர்களான மனைவியருக்கும் ஒரு கட்டளையிட பணிக்கப்படுகிறார்கள். அதன்படி, அவர்கள் தங்கள் துப்பட்டாக்களை (முந்தானைகளை) தங்கள் மீது தொங்கவிட்டுக் கொள்ள வேண்டும். இதன்மூலம், அவர்கள் எளிதில் அடையாளம் காணப்படுவார்கள், தொல்லைகளுக்கு ஆளாகாமல் பாதுகாக்கப்படுவார்கள்.

இங்கு, 'அவர்களை அறிந்துகொள்வதற்கு' என்பதன் பொருள் மிகவும் முக்கியமானது. ஹிஜாப் அணியும் பெண், ஒரு கௌரவமான, கற்புடைய, அடக்கமான, நாணமுள்ள, தூய்மையான பெண் என்று மற்றவர்களால் அடையாளம் காணப்படுவாள். ஹிஜாப் என்பது வெறுமனே ஒரு ஆடையல்ல, அது ஒரு பெண்ணின் அடையாளத்தையும், கண்ணியத்தையும் பாதுகாக்கும் கவசம். சமுதாயத்தில் அவளுக்கு ஒரு தனித்துவமான இடத்தை வழங்கும் ஒரு அம்சம்.

**இஸ்லாம் கூறும் வழிகாட்டுதல்கள்**

ஹிஜாப் என்பது இஸ்லாமிய பெண்கள் அணியும் ஆடையாகும். இது அவர்களின் அடக்கத்தையும், கண்ணியத்தையும் வெளிப்படுத்துகிறது. ஹிஜாப் அணியும் போது இஸ்லாம் சில வழிகாட்டுதல்களை வழங்குகிறது. அவற்றை பின்பற்றி சரியான முறையில் ஹிஜாப் அணிவது அவசியம்.

ஹிஜாபின் முக்கிய அம்சங்கள்:

1. உடல் முழுவதும் மறைக்க வேண்டும்: பெண்கள் தங்கள் முகம் மற்றும் மணிக்கட்டு வரை உள்ள கைகளைத் தவிர, மற்ற அனைத்து உடல் பாகங்களையும் மறைக்க வேண்டும். இது அவர்களின் அடக்கத்தை உறுதி செய்கிறது.

2. ஆடை அடர்த்தியாக இருக்க வேண்டும்: ஹிஜாப் அணியும் போது, ஆடை மெல்லியதாகவோ அல்லது உடலை வெளிக்காட்டுவதாகவோ இருக்கக்கூடாது. அது உடலின் வனப்பை மறைக்கும் வகையில் அடர்த்தியாக இருக்க வேண்டும். ஆயிஷா (ரலி) அவர்கள் மெல்லிய ஆடை அணிந்த பெண்களைக் கண்டித்த சம்பவம் இதற்கு சான்றாக உள்ளது. "நீங்கள் முஸ்லிமாக இருந்தால், இது ஈமான் கொண்டவர்களுக்கான ஆடையல்ல" என்று அவர் கூறினார்.

3. தளர்வான ஆடை: ஆடை உடலை இறுக்கமாகப் பிடித்து அதன் வடிவத்தை வெளிக்காட்டாதவாறு தளர்வாக இருக்க வேண்டும். இறுக்கமான ஆடைகள் உடலின் கவர்ச்சியை வெளிப்படுத்துவதால் தவிர்க்கப்பட வேண்டும்.

4. கவர்ச்சியற்ற ஆடை: பிறரின் கவனத்தை ஈர்க்கும் கவர்ச்சியான ஆடைகளை அணியக்கூடாது. ஆடைகள் எளிமையாகவும், கண்ணியமாகவும் இருக்க வேண்டும்.

5. ஆண்களைப் போன்ற ஆடை கூடாது: பெண்கள் ஆண்களைப் போன்ற ஆடைகளை அணியக்கூடாது. நபி (ஸல்) அவர்கள் ஆண்களைப் போல் ஆடை அணியும் பெண்களையும், பெண்களைப் போல் ஆடை அணியும் ஆண்களையும் சபித்துள்ளார்கள். இது ஆடை விஷயத்தில் பாலின வேறுபாடுகளைப் பேணுவதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

ஹிஜாப் அணியும் ஒவ்வொரு முஸ்லிம் பெண்ணும் இந்த ஷரீஅத் வரையறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். இது அவர்களின் நம்பிக்கையையும், ஒழுக்கத்தையும் பாதுகாக்கும்

**தக்வா எனும் இறையச்ச ஆடை:**

ஹிஜாப் என்பது ஆடை மட்டுமா? ஏன்று ஆராய்ந்தால் நிச்சயமாக இல்லை! உடலை சுற்றி அணியும் ஆடை மட்டுமே ஹிஜாப் அல்ல. மாறாக பழக்க வழக்கங்களில் ஹிஜாப் இருக்க வேண்டும் நல்ல நடத்தையில் ஹிஜாப் இருக்க வேண்டும். ஆணாயினும் பெண்ணாயினும் ஒரு முஸ்லிம் பேசும் பேச்சில் ஹிஜாப் இருக்க வேண்டும், பார்க்கும் பார்வை, கேட்கும் விஷயங்களில் உள்ளும் புறமும் ஹிஜாப் இருந்தால்தான் கற்பும் கண்ணியமும் பாதுகாப்புப் பெறும்.

கற்பு என்பது ஆண் பெண் உறவு மட்டுமல்ல, மாறாக கண்ணுக்கு கைகளுக்கு, காலுக்கு இதயத்திற்கு கூட கற்பு உண்டு என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். பார்க்கக் கூடாத காட்சியை பார்ப்பது கண் செய்யும் விபச்சாரம், செய்யக்கூடாத செயலைச் செயலைச் செய்வது கை செய்யும் விபச்சாரம், யோசிக்கக் கூடாததை யோசிப்பது இதயம் செய்யும் விபச்சாரம் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி முஸ்லிம்)

இறைவன் கூறுகிறான் ஆதத்தின் மக்களே! ஊங்களுடைய வெட்கத் தலங்களை மறைப்பதற்காகவும், உங்கள் உடலுக்குப் பாதுகாப்பாகவும் அலங்காரமாகவும் இருக்கக்கூடிய ஆடைகளை நாம் உங்களுக்கு அருளியிருக்கிறோம். இருப்பினும் இறையச்சம் தக்வா எனும் ஆடையே மிக சிறந்த ஆடையாகும். (அல்குர்ஆன் 7:26)

ஒரு பெண்ணிற்கு இறைவன் இருவித ஆயுதங்களைக் கொடுத்துள்ளான். ஒன்று இறையச்சம் மற்றொன்று ஹிஜாப் எனும் கவசம் இந்த இரண்டும் ஒரு சேரப் பேணப்படும் போதுதான் மற்றொன்றும் தானாகவே சென்று விடும் என்பதில் ஐயமில்லை.

**உலகப் பெண்களுக்கான உன்னத எடுத்துக்காட்டு:**

கற்பு ஒழுக்கம் மிக்க பெண்களுக்கு மர்யம் (அலை) அவர்கள் அல்லாஹ் எடுத்துக்காட்டாகக் கூறுகிறான். மர்யம் (அலை) அவர்கள் தனிமையில் இருந்த இடத்தில நபி ஈஸா (அலை) அவர்கள் குறித்த நற்செய்தியை அறிவிப்பதற்காக ஜிப்ரில் (அலை) வருகை தருகிறார். அப்போது அவர்களுகிடையே நடந்த உரையாடலை அல்லாஹ் கூறுகிறான்.

மேலும் (நபியே) மர்யத்தைப் பற்றி இந்த வேதத்தில் (உள்ளதை) நீர் விவரித்துக் கூறுவீராக! அவர் தம்முடைய குடும்பத்தாரை விட்டு விலகி கிழக்குப் பக்கமாக ஒதுங்கியிருந்த நேரத்தில் அவர் ஒரு திரையிட்டு அவர்களிலிருந்து மறைந்திருந்தார். (அப்போது) நாம் அவரிடம் நம்முடைய ரூகை (வானவரை) அனுப்பினோம்.

அவர் மர்யத்தின் முன்னிலையில் முழு மனித உருவில் தோன்றினார். உடனே மர்யம் கூறினார்: "உம்மை விட்டுக் கருனை மிக்க இறைவனிடம் நான் பாதுகாவல் கோருகின்றேன். நீர் இறையச்சம் உள்ளவராயின்!" அதற்கு அவர் கூறினார்: "நான் உம் இறைவனின் தூதராவேன்" தூய்மையான ஓர் குழந்தையை உமக்கு வழங்குவதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன். மர்யம் கூறினார். "எனக்கு எவ்வாறு ஆண் குழந்தை பிறக்கும்? என்னை எந்த மனிதனும் தீண்டவில்லையே. நான் தீய நடத்தையுடையவளும் அல்லவே!

(அல்குர் ஆன் 19:16-18)

எந்த அந்நிய ஆடவரும் என்னைத் தொட்டதுகூட கிடையாதே. எனக்கு எப்படிக் குழந்தை பிறக்கும் என்று வியப்படைகிறார் மர்யம் அலை. தீண்டுதல் என்று சொன்னால் ஆண் பெண் உறவு என்று பொருள் இருந்தாலும், சாதாரணத் தொடுதலையும் வேர்த்தே இறைவன் இங்கே கூறுகிறான். ஆகவே ஒரு பெண் வாழ்நாள் முழுக்க அந்நிய ஆடவரின் விரல் நுனிகூட தன் மேனியில் படாமல் வாழ்ந்திருக்கிறார் என்றால் அது எப்படி முடிந்தது? இறையச்சம் என்னும் தக்வா தான் முதற்காரணமும் முழமை காரணமும் ஆகும். எனவே தான் ஹிஜாப் என்னும் ஆடையை அணிவதற்கு முன் தக்வா என்னும் இறையச்ச ஆடையை அணிந்து கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.

**அலங்கார ஹிஜாபை தவிர்ப்போம்:-**

நமது பெண்களில் சிலர் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் எண்ணத்துடன் தலையை மூடும் துணியையும் அணியும் ஹிஜாபையும் அலங்காரங்களுடன் பளிச்சிடும் பல வண்ணங்களில் கவர்ச்சிகரமாக அணிகின்றனர். இது இறைவன் மறுத்த தபர்ருஜ் எனும் கவர்ச்சியை வெளிக்காட்டலாகும். ஒரு முறை உமையா பின்த் ருகையா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்பதற்காக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வருகை தந்த போது அவரிடம் நபியவர்கள் கூறிய அறிவுரை யாதெனில் நீங்கள் அல்லாஹ் எதனையும் இணை வைக்க கூடாது. திருடக்கூடாது விபச்சாரத்தில் ஈடுபடக்கூடாது, உமது குழந்தைகளை கொல்லக்கூடாது அறியாமைக் காலத்தில் உள்ளது போல் தபர்ருஜ் எனும் அழகையோ கவர்ச்சியையோ வெளிக்காட்டக் கூடாது என்று கூறினார்கள். ஒரு முறை அஸ்மா (ரலி) அவர்கள் மெல்லிய ஆடை ஒன்றை அணிந்தவராக நபி (ஸல்) அவர்களிடம் வந்திருந்தார். இதைக் கண்ட நபிகளார் உடனே தமது முகத்தைத் திருப்பிக் கொண்டு இவ்வாறு

கூறினார்கள்: அஸ்மாவே! ஒரு பெண் பருவமடைந்துவிட்டால் அவளின் உடலில் இதனையும், இதனையும் தவிர வேறு எப்பகுதியும் வெளியே தெரியலாகாது என்று கூறி தமது முகத்தையும்;. இருகைகளையும்சுட்டிககாட்டினார்கள

(அபூதாவூத்)

ஆடை அணிந்தும் அணியாதவர்களாக கவர்ச்சிப் பதுமைகளாக காட்சி தரும் பெண்களுக்கு இந்த நபிமொழி ஒரு பெரும் பாடமாக இருக்கட்டும்.

மேணியையும் உடல் அமைப்பையும் வெளிக்காட்டும் மெல்லிய ஆடையை ஒருவகை நிர்வாணம் என்றே இஸ்லாம் கருதுகின்றது. அவ்வாறு மெல்லிய ஆடை அணிந்திருப்பவர்கள் என்றே கருத்தை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

எனது சமூகத்தில் பிந்திய காலத்தில் சில பெண்கள் தோன்றுவார்கள் அவர்கள் ஆடை அணிந்த நிவாணிகளாக இருப்பார்கள். ஆவர்களின் தலை முடிகள் ஒட்டகங்களின் திமில் போல் இருக்கும் அவர்களை சபியுங்கள் நிச்சயமாக அவர்கள் சபிக்கப்பட்டவர்கள்! (தப்ரானீ)

ஒரு பெண் இறுக்கமான ஆடையை அணிந்தால் அது அவளின் உடலமைப்பைத்தான் வெளியே காட்டும். ஒரு பெண்ணுக்குரிய இஸ்லாமிய ஆடையின் நோக்கத்தை அது பாழ்படுத்தி விடும். “பெண்கள் முந்தானைகளால் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ளட்டும்’ என்ற வசனம் இறங்கிய போது, தமது மெல்லிய ஆடைகளைப் பெண்கள் கைவிட்டனர். தடித்த (கம்பளி போன்ற) துணிகளால் முந்தானைகளைத் தயாரித்துக் கொண்டனர் என்று அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (அபூதாவூத்)

ஒரு முறை நபி (ஸல்) அவர்களுக்கு எகிப்திய ஆடை ஒன்று பரிசாகக் கொடுக்கப்பட்டது. அதனை உஸாமா (ரலி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் கொடுத்தார்கள். ஆவர் அதனை தமது மனைவிக்கு அணியக் கொடுத்தார். ‘நீர் அணியவில்லையா? என்று நபி (ஸல்) அவர்கள் உஸாமாவிடம் கேட்டதற்கு தமது மனைவிக்கு கொடுத்துவிட்டதாக அவர் கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘அதனை அணியும் போது அதனுள்ளே ஓர் உள்ளாடையை அணிந்துகொள்ளும்படி உமது மனைவிக்கு கூறுங்கள் ஏனெனில் அது உடலின் கட்டமைப்பை வெளிக்காட்டுவதாக இருக்குமோ என நான் அஞ்சுகின்றேன்’ என்று கூறினார்கள். ஓவ்வொரு பெண்ணும் தன்னுடைய பேணுதலை ஒழுக்கத்தை தானே முன்னின்று ஹிஜாப் என்ற ஒழுக்கத்தை காத்து வாழ வேண்டும்.

1. **மௌவி நூஹ் மஹ்ழரி.** *ஹிஜாப் உள்ளும் புறமும்.*
2. **அல்குர்ஆன்.** சூரா 24 (அந்-நூர்), வசனம் 31.
3. **அல்குர்ஆன்.** சூரா 33 (அல்-அஹ்ஜாப்), வசனம் 59.
4. **அஹ்மத் இப்னு ஹம்பல்.** *முஸ்னத் அஹ்மத்.*
5. **அந்-நஸாயி.** *சுனன் அந்-நஸாயி.*
6. **அல்-ஹாக்கிம் அந்-நைஸாபூரி.** *முஸ்தத்ரக் அலஸ் ஸஹீஹைன்.*
7. **புகாரி.** *ஸஹீஹ் அல்-புகாரி.*
8. **முஸ்லிம் இப்னு அல்-ஹஜ்ஜாஜ்.** *ஸஹீஹ் முஸ்லிம்.*
9. **அல்குர்ஆன்.** சூரா 7 (அல்-அஃராஃப்), வசனம் 26
10. **அல்குர்ஆன்.** சூரா 19 (மர்யம்), வசனங்கள் 16-18.
11. **அபூதாவூத்.** *சுனன் அபூதாவூத்.*

**REFERENCES**

1. Mauwi Nuh Mahzari. The inner and outer hijab.

2. The Quran. Surah 24 (An-Nur), verse 31.

3. The Quran. Surah 33 (Al-Ahzab), verse 59.

4. Ahmad ibn Hanbal. Musnad Ahmad.

5. An-Nasa'i. Sunan An-Nasa'i.

6. Al-Hakim an-Naysaburi. Mustadrak alas saheehayn.

7. Bukhari. Saheeh al-Bukhari.

8. Muslim ibn al-Hajjaj. Saheeh Muslim.

9. The Quran. Surah 7 (Al-A'raf), verse 26

10. The Quran. Surah 19 (Maryam), verses 16-18.

11. Abu Dawud. Sunan Abu Dawud.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.